**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No.78/2022**

DW–1 சசிரேகா நாள்.06.10.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்மாமனார் பெயர் ராஜு ஆகும். தாவாசொத்து உட்பட மொத்தம் 47செண்டை என்மாமனார் 20.09.2018ம் தேதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த அசல் ஆவணம் என்னிடம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 மேற்படி கிரைய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். தாவா சொத்து உட்பட மொத்தம் 47 செண்ட் ஆதியில் வாதிக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். கிரையம் வாங்கும்போது என்மாமனார் வாதிக்கு கிரயபணம் ரூ.4.5லட்சம் பாக்கி தரவேண்டி இருந்தது என்றால் சரியல்ல. என்மாமனார் கிரயம் வாங்கும்போது நான் நேரடியாக உடனில்லை. அவர்களுக்குள் என்ன நடந்தது என்றவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ரூ.4.5லட்சம் பாக்கி இருந்ததால் தான் வா.சா.ஆ.3 ஆவணத்தை என்மாமனார் எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல. பாக்கி பணத்தை கொடுக்கமுடியாததால் ஒருபகுதியை கிரயம் கொடுக்க ஒப்புக்கொண்டு வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை என்மாமனார் எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல. கிரயதொகை ரூ.11.50லட்சம் என்று பேசி ஒப்பந்ததேதியில் ரூ.5லட்சம் முன்பணம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஏற்பட்ட போது நான் உடனில்லை என்றால் என்மாமனார் ஒப்பந்தம் எழுதிதரவில்லை. என்மாமனார் வா.சா.ஆ.4 உறுதிமொழி ஆவணத்தில் மொத்தம் ரூ.9.50லட்சம் வரவு வைத்து கொண்டதாக எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என்மாமனார் உயிரோடு இருக்கும்போது வாதி மீதி கிரயதொகையை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை பொறுத்து கிரயபத்திரம் எழுதிகேட்டார் என்றும், என்மாமனார் தான் உடல்நிலை சரியில்லை என்றும், உடல்நிலை சரியான உடன் எழுதிதருவதாக சொன்னார் என்றால் சரியல்ல. என்மாமனார் இறந்தபின்னர் என்னிடமும், மற்ற பிரதிவாதியிடமும் மீதி பணத்தை பெற்றுக்கொண்டு கிரயபத்திரம் எழுதி தருமாறு வாதி கேட்டார்

என்றால் சரியல்ல. என்மாமனார் கிரயபத்திரம் எழுதிதர மறுப்பதாக வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் என்மாமனார் இறந்தபின்னர் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 புகாரை கொடுத்தார் என்றால் சரிதான். என்மாமனார் உடல்நிலை சரியில்லாமல் மோசமாக இருந்தபோது கிரயஒப்பந்த விவரம் தெரிந்திருந்தும் மோசடியாக வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிவாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.5 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. காவல்நிலைய விசாரணையின் போது நாங்கள் கிரய பத்திரம் எழுதிதரமுடியாது என்று சொல்லிவிட்டோம். 14.10.2022 ம் தேதி பாக்கி பணத்தை பெற்றுக்கொண்டு கிரயபத்திரம் எழுதிதருமாறு வாதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் என்பெயரில் உள்ள வா.சா.ஆ.8 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதற்கு பதில்அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதி துறைமங்கலத்தில் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. தாவா கிரய ஒப்பந்ததில் உள்ளது என்மாமனாரின் கையெழுத்து இல்லையென்று நான் கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகளுக்கும் எனக்கும் விரோதம் இருப்பதாக எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கும் எனக்கும் விரோதம் கிடையாது. வாதிக்கும் எனக்கும் விரோதம் கிடையாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக தயார் செய்து வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் வாதிக்கு கிடையாது என்றும், அது உண்மையான ஆவணம் என்றால் சரியல்ல. வாதி எப்போதும் கிரயம் வாங்க விருப்பமாகவும், தயாராகவும் இருப்பதால் தான் பாக்கி கிரய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரயஒப்பந்தம் உண்மையானது என்றும், நான் வேண்டுமென்றே பணத்தையும், சொத்தையும் மோசடி செய்யவேண்டி பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உண்மையான ஆவணம் என்பதால்

வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபின்னரும் நான் சட்டப்படி வேறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பே வா.சா.ஆ.1 இருக்கும் விவரம் எனக்கு தெரியும் என்றும், புகார் கொடுத்தபின்னர் தான் மேற்படி விவரம் தெரியும் என்றும் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 சொத்தை அபகரிக்க மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று கூறி வாதி மீது நான் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவில்லை. வா.சா.ஆ.1 உண்மையான ஆவணம் என்பதால் தான் நான் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், தற்போது பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் வாதிக்கு அவர்கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.